05-02-2025 Tamil
05/02/25 English

காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா
Morning Murli Om Shanti BapDada

மதுபன்
Madhuban

இனிமையான குழந்தைகளே! இந்த சரீரம் என்ற உடையை இங்கேயே விட வேண்டும். ஆகவே இதன் மீது பற்றுதலை விலக்குங்கள். நண்பர் உறவினர் யாருடைய நினைவும் வரக்கூடாது.
Essence:Sweet children, you definitely have to discard those costumes, your bodies, here. Therefore, finish your attachment to them. Do not remember your friends and relatives.

கேள்வி:யோக பலமுடைய குழந்தைகளின் அடையாளம் என்ன?
Question:What things indicate the children who have the power of yoga?

பதில்:அவர்கள் எந்த விஷயத்திலும் சிறிதும் விழ மாட்டார்கள் எங்கேயும் பற்றும் இருக்காது.
Answer:They aren't even slightly disturbed by any situation. They have no attachment to anyone.

இன்று யாராவது சரீரத்தை விட்டாலும் துக்கம் ஏற்படாது. ஏனென்றால் இவர்களுக்கு டிராமாவில் இவ்வளவு தான் நடிப்பு என அறிகிறார்கள். ஆத்மா ஒரு உடலை விட்டு விட்டு இன்னொரு உடலை எடுக்கும்.
For example, if someone leaves his body today, they won't feel any sorrow, because they know that that soul only had that much of a part in the drama, that souls discard their bodies and take others.

ஓம் சாந்தி.
Om shanti.

இந்த ஞானம் மிகவும் குப்தமானது. இதில் நமஸ்காரம் கூட கூற வேண்டியதில்லை.
This knowledge is very incognito. You don't even need to say “Namaste”.

உலகத்தில் நமஸ்காரம் மற்றும் இராம் இராம் எனக் கூறுகிறார்கள்.
People in the world greet one another and say “Namaste” or “Ram, Ram”.

இங்கே இந்த விஷயங்கள் எதுவும் தேவையில்லை. ஏனென்றால் இது ஒரு குடும்பம் ஆகும்.
None of those things can go on here because this is a family.

குடும்பத்தில் ஒருவருக் கொருவர் நமஸ்காரம் அல்லது காலை வணக்கம்

கூறுவது அவ்வளவு அழகல்ல.
It doesn’t seem right to say "Namaste" or "Good morning" in a family.

வீட்டில் உணவு சாப்பிடுவார்கள், அருந்துவார்கள், அலுவலகத்திற்கு செல்வர். பிறகு வருவர். இது நடந்து கொண்டு இருக்கிறது.
In a home, one eats, goes to the office and comes back; this continues all the time.

வணக்கம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.
There is no need to say “Namaste”.

குட்மார்னிங் சொல்லக்கூடிய ஃபேஷன் கூட ஐரோப்பியர்களிடம் இருந்து வந்திருக்கின்றது.
The fashion of saying “Good morning” was started by the Europeans.

இல்லை யென்றால் முன்பு இவ்வாறு சொல்லவில்லை.
Otherwise, there was nothing like that previously.

சிலர் சத்சங்கங்களில் சந்திக்கிறார்கள், வணங்குகிறார்கள், காலில் விழுகிறார்கள்.
When people meet one another at devotional gatherings, they say “Namaste” and bow to each other’s feet.

இந்த காலில் விழுதல் போன்றவை பணிவிற்காக கற்பிக்கின்றார்கள்.
This custom of bowing to someone’s feet is taught for humility.

இங்கேயோ குழந்தைகளாகிய நீங்கள் ஆத்ம உணர்வுடையவர்களாக வேண்டும்.
Here, you children have to become soul conscious.

ஆத்மா ஆத்மாவிற்கு என்ன செய்யும்.
What would a soul do to a soul?

இருப்பினும் சொல்ல வேண்டி இருக்கிறது.
Nevertheless, this has to be said.

பாபா நமஸ்காரம் என்று பாபாவிற்கு கூறுவார்கள்.
For example, you would say “Namaste” to Baba.

இப்போது நான் சாதாரண பிரம்மா உடல் மூலமாக உங்களைப் படிக்க வைக் கின்றேன். இவர் மூலமாக ஸ்தாபனை செய்கிறேன் என பாபா கூறுகின்றார்.
Now, the Father says: I teach you through the ordinary body of Brahma. I carry out establishment through him.

எப்படி?
How?

பாபா நேரில் வரும்போது தான் புரிய வைக்க முடியும். இல்லையென்றால் யார் எப்படி புரிந்து கொள்வார்கள்?
Only when the Father is personally in front of you can that be explained by Him. Otherwise, how could anyone understand?

இந்த தந்தை நேர் எதிரில் அமர்ந்து குழந்தைகளுக்கு புரிய வைக்கின்றார்.
The Father sits here in front of you face to face and explains and you children understand.

பாப்தாதா நமஸ்காரம் என இருவருக்கும் நமஸ்காரம் செய்ய வேண்டியிருக்கிறது.
You would have to say "Namaste" to both: "BapDada, namaste.

வெளியில் இருப்பவர்கள் பாப்தாதா என்று கூறுவதைக் கேட்டால் இது என்ன எனக் குழம்பி போவார்கள்.
" If those from outside were to hear this, they would become confused and ask what you're saying when you say "BapDada".

பல மனிதர்களுக்கு இரண்டு பெயர்கள் இருக்கின்றதல்லவா.
Many human beings also have double names.

இலட்சுமி நாராயணன் மற்றும் ராதா கிருஷ்ணன். என்று கூட பெயர்கள் இருக்கிறது.
For example, Lakshmi-Narayan and Radhe-Krishna are also names.

இது கணவனும் மனைவியும் இணைந்தது போல் ஆகிவிட்டது.
It is as though a man and woman become combined.

இப்போது இவரோ பாப்தாதா ஆவார்.
Now, this one here is BapDada.

இந்த விஷயங்களை குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிந்து கொள்ள முடியும்.
Only you children can understand these things.

நிச்சயம் பாபா பெரியவர்.
The Father is definitely greater.

இந்த பெயர்கள் இரண்டாக இருக்கலாம். ஆனால் ஒருவர் தான் அல்லவா?
Although they have a double name, it is one person.

பிறகு ஏன் இரண்டு பெயரை வைத்திருக் கிறார்கள்?
So, why do they keep both names?

இப்பொழுது இந்த பெயர் தவறு என குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள்.
You children now know that those names are wrong.

பாபாவை வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் பாப்தாதா நமஸ்காரம் என்கிறீர்கள். பாபா உடலை உடைய ஆன்மீக குழந்தைகளே! நமஸ்காரம் என்கிறார். ஆனால் இவ்வளவு நீளமாகக் கூறுவது அழகாக இல்லை. வார்த்தைகள் சரியாகும்.
No one else can recognise Baba. You say, “Namaste BapDada,” and the Father would reply, “Namaste to you physical, spiritual children”. Such a long greeting doesn’t seem appropriate, but the words are right.

இப்போது நீங்கள் உடலை உடைய குழந்தைகளாகவும் இருக்கிறீர்கள். ஆன்மீகக் குழந்தைகளாகவும் இருக்கிறீர்கள்.
All of you are physical children and also spiritual children.

சிவபாபா அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையாக இருக்கின்றார். மேலும் பிரஜாபிதாவும் இருக்கிறார்.
Shiv Baba is the Father of all souls and then Prajapita too is needed.

பிரஜாபிதா பிரம்மாவின் வாரிசுகள் சகோதரன் சகோதரிகள்.
The children of Prajapita Brahma are brothers and sisters.

இல்லற மார்க்கம் ஆகி விடுகிறது.
It is a family path.

நீங்கள் அனைவரும் பிரம்மாகுமார் பிரம்மா குமாரிகள்.
You are all Brahma Kumars and Kumaris.

பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் ஆவதால் பிரஜாபிதாவும் நிரூபணம் ஆகிறது.
Prajapita Brahma’s existence is validated through the existence of you Brahma Kumars and Kumaris.

இதில் மூடநம்பிக்கை எதுவும் இல்லை.
This is not a matter of blind faith.

பிரம்மா குமார் பிரம்மா குமாரிகளுக்கு தந்தையிடமிருந்து சொத்து கிடைக்கிறது எனக்கூறுங்கள். பிரம்மாவிடமிருந்து கிடைக்காது.
Tell them that the Brahma Kumars and Kumaris receive the inheritance from the Father; they don’t receive it from Brahma.

பிரம்மாவும் சிவபாபா வின் குழந்தை.
Brahma too is child of Shiv Baba.

சூட்சும வதனவாசி பிரம்மா, விஷ்ணு, சங்கர் போன்றோர் படைப்புகள்.
The residents of the subtle region, Brahma, Vishnu and Shankar, are creations.

இவர்களை படைப்பவர் சிவன்.
Their Creator is Shiva.

சிவனை படைப்பவர் யார் என்று கூற முடியாது.
No one can ask who Shiva's creator is.

சிவனை படைப்பவர் யாருமில்லை.
No one can be Shiva's creator.

பிரம்மா, விஷ்ணு, சங்கர் படைப்பு ஆவர்.
Brahma, Vishnu and Shankar are part of creation.

இவர்களுக்கும் மேலானவர் சிவன். அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையாவார்.
Even higher than them is Shiva, the Father of all souls.

இப்போது படைக்கக்கூடியவர் இருக்கிறார் என்றால் எப்போது படைத்தார் என்ற கேள்வி எழுகிறது.
Now, if He is the Creator, the question arises, "When did He create?

இது அனாதியாகும்.
" No; this creation is eternal.

இத்தனை ஆத்மாக்களை எப்பொழுது படைத்தார்?
The question "When did He create so many souls?

இந்தக் கேள்வி எழ முடியாது.
" cannot arise.

இந்த முதலும் முடிவுமற்ற நாடகம் நடந்து கொண்டேயிருக்கிறது. இது முடிவற்றதாகும். இதற்கு ஒருபோதும் முடிவு ஏற்படாது.
This eternal drama continues; it is infinite; it never comes to an end.

இந்த விஷயங்களை குழந்தைகளாகிய நீங்கள் வரிசைக்கிரமத்தில் புரிந்து கொள்கிறீர்கள்.

All of these things are in you children, numberwise.

இது மிகவும் எளிதாகும்.
This is very easy.

யார் இறந்தாலும் உயிரோடு இருந்தாலும் ஒரு பாபாவை தவிர வேறு யார் மீதும் பற்றுதல் இருக்கக்கூடாது.
Whether anyone lives or dies, you should have no attachment to anyone but the one Father.

அம்மா இறந்தாலும் அல்வா சாப்பிடுங்கள். என்று பாடப்பட்டிருக் கிறது. யார் இறந்து போனாலும் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இந்த நாடகம் ஏற்கெனவே நிச்சயிக்கப் பட்டிருக்கிறது.
There is a song: Even if your mother dies, eat halva… For instance, even if someone dies, there is nothing to worry about because this drama is predestined.

நாடகத்தின் படி அவர் இச்சமயம் போய்த்தான் ஆக வேண்டும். இதில் என்ன செய்ய முடியும்?
According to the drama, he had to go at that time. What can anyone do about that?

சிறிதும் துக்கப்படக்கூடாது.
There is no need to be sad at all.

இது தான் யோக பலத்தின் நிலையாகும்.
This is the stage of the power of yoga.

சிறிதும் விழக்கூடாது (வலிக்க) என சட்டம் கூறுகிறது.
The law says that you shouldn't be even slightly disturbed.

அனைவரும் நடிகர்கள் அல்லவா?
Everyone is an actor.

அவர்கள் அந்தந்த பாகங்களை தொடர்ந்து விளையாடுகிறார்கள்.
Each one continues to play his own part.

குழந்தைகளுக்கு ஞானம் கிடைத்திருக்கிறது.
You children have received this knowledge.

ஓ, பரம்பிதா பரமாத்மா வந்து எங்களை அழைத்துச் செல்லுங்கள் என பாபாவிடம் கூறுகிறார்கள். இத்தனை உடல்களை அழித்து அனைத்து ஆத்மாக்களையும் உடன் அழைத்துச் செல்லுதல் மிகப் பெரிய வேலையாகும்.
They say to the Father: O Supreme Father, Supreme Soul, come and take us away! It is a very big job to have all of these bodies destroyed and to take all souls back with Him.

இங்கே ஒருவர் இறந்துவிட்டாலும் 12 மாதங்கள் அழுது கொண்டேயிருக் கிறார்கள்.
Here, if someone dies, people continue to cry for 12 months.

பாபா இவ்வளவு ஆத்மாக்களையும் அழைத்துச் செல்வார்.
The Father will take so many souls back with Him.

அனைவரும் உடலையும் இங்கேயே விட்டு விடுவார்கள்.
Everyone's body will be left behind here.

மகாபாரத போர் ஏற்பட்டுவிட்டால் கொசுக் கூட்டங்களைப் போல் இறப்பார்கள் என குழந்தைகளுக்குத் தெரியும்.
You children know that when the Mahabharat War begins, they will continue to leave like swarms of mosquitoes.

இயற்கை சீற்றங்களும் ஏற்படும்.
Natural calamities too are to come.

இந்த உலகம் முழுவதும் மாறுகிறது.
This whole world has to be transformed.

இங்கிலாந்து, இரஷ்யா பாருங்கள், எவ்வளவு பெரியதாக இருக்கிறது! சத்யுகத்தில் இவைகள் இருந்ததா?
Look how large the population of England and Russia etc. are now. Did all of them exist in the golden age?

நம்முடைய இராஜ்யத்தில் இவர்கள் யாரும் இல்லை என்பதும் இந்த உலகில் யாருடைய புத்தியிலும் இல்லை.
It doesn't even enter the intellect of anyone in the world that none of them existed in our kingdom.

ஒரே தர்மம், ஒரே இராஜ்ஜியம் இருந்தது. உங்களில் ஒரு சிலர் புத்தியில்தான் நன்கு பதிவாகிறது.
There was only one religion and one kingdom. Even you are numberwise in keeping this in your intellects very well.

ஒரு வேளை பதிவாகியது என்றால் எப்பொழுதும் போதை ஏறிக் கொண்டேயிருக்கும்.
If it is imbibed by you, your intoxication remains constantly high.

ஒரு சிலருக்குத் தான் அந்த அளவிற்கு போதை மிகவும் அரிதாக ஏறுகிறது.
Only a few maintain such high intoxication, and that is with great difficulty.

நண்பர்கள் உறவினர் போன்றோர்களின் நினைவில் விலகி ஒரு எல்லையற்ற

மகிழ்ச்சியில் நிலைத்திருப்பது மிகவும் அதிசயமாகும்.
To remove one's remembrance of friends, relatives and everyone else and to become stable in unlimited happiness is a great wonder. Yes, this too will happen at the end.

கடைசியில் தான் கர்மாதீத நிலையைப் பெறுகிறார்கள்.
Only at the end is the karmateet stage attained.

சரீரத்தில் இருந்தும் பற்று விலகிப் போகிறது.
The consciousness of bodies will then be broken.

அவ்வளவு தான், இப்பொழுது நாம் போகிறோம், இது பொதுவான விஷயம் ஆகும்.
"That's it! We are now going home." It is as though this becomes common.

நாடகத்தில் நடிப்பவர்கள் வீட்டிற்குத் திரும்பிப் போகிறார்கள் அல்லவா?
When actors in a play finish playing their parts, they go home.

இந்த தேகம் என்ற உடையை நீங்கள் இங்கேயே விட வேண்டும்.
You have to leave those costumes, your bodies here.

இந்த உடையை இங்கே தான் எடுத்தீர்கள். இங்கேயே தான் விட வேண்டும்.
You adopted those costumes here and you have to leave them behind here.

இந்த விஷயங்கள் அனைத்தும் உங்களுடைய புத்தியில் இருக்கிறது. வேறு யாருடைய புத்தி யிலும் இல்லை.
All of these new aspects are in your intellects. They are not in anyone else's intellect.

அப்பா மற்றும் ஆஸ்தி.
Alpha and beta.

அனைவருக்கும் மேல் அப்பா இருக்கிறார்.
Alpha is highest of all.

பிரம்மா மூலமாக ஸ்தாபனை, சங்கர் மூலமாக அழிவு, விஷ்ணு மூலமாக பாலனை என்கிறார்கள்.
It is said: Establishment through Brahma, destruction through Shankar and sustenance through Vishnu.

சரி. பிறகு சிவனின் வேலை என்ன?
Achcha, so what is Shiva's task?

உயர்ந்ததிலும் உயர்ந்த சிவபாபாவைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை.

No one knows Shiv Baba, the Highest on High.

அவர் சர்வவியாபி என்கிறார்கள். அனைத்தும் அவருடைய ரூபம் என்கிறார்கள்.
They just say, “He is omnipresent and all of those are His forms anyway.

முழு உலகினரின் புத்தியிலும் இது உறுதியாகி விட்டிருக்கிறது. ஆகவே அனைவரும் தமோபிர தானமாகி விட்டனர்.
” This has become firm in the intellect of everyone in the world and this is why they have become tamopradhan.

முழு உலகமும் துர்கதி அடைந்துவிட்டது என பாபா கூறுகின்றார்.
The Father says: The whole world has reached degradation.

பிறகு நான் தான் வந்து அனைவருக்கும் சத்கதியை அளிக்கிறேன்.
Then, I alone have to come and give salvation to all.

ஒருவேளை சர்வவியாபி என்றால் அனைவரும் பகவானா?
If He were omnipresent, it would be that all are God and God alone.

ஒரு புறம் அனைவரும் சகோதரர்கள் என்கிறார்கள். பிறகு அனைவரும் தந்தை என்கிறார்கள், எதையும் புரிந்து கொள்ளவில்லை.
On the one hand, they say “All are brothers”, and then, on the other, they say “All are the Father”. They have no understanding.

குழந்தைகளே என்னை நினைத்தால் உங்களுடைய விகர்மங்கள் அழியும் என எல்லையற்ற தந்தை கூறுகின்றார்.
The unlimited Father says to you children: Children, remember Me and your sins will be absolved.

நீங்கள் இந்த தாதாவை அல்லது மம்மாவைக் கூட நினைக்கக் கூடாது.
Baba says: Do not even remember this Dada or Mama.

மம்மாவும் இல்லை பாபாவும் இல்லை. யாருக்கும் எந்த மகிமையும் இல்லை என பாபா கூறுகின்றார்.
The Father says: No one should be praised, neither Mama nor Baba.

சிவபாபா இல்லை என்றால் இந்த பிரம்மா என்ன செய்வார்?
If Shiv Baba didn’t exist, what could this Brahma do?

இவரை நினைப்பதால் என்ன நடக்கும்? ஆம், இவர் மூலமாக நாம் தந்தையிடமிருந்து சொத்தை அடைந்து கொண்டு இருக்கிறோம். இவரிட மிருந்து இல்லை என அறிகிறீர்கள்.
What would happen by remembering this one? Yes, you know that you are claiming the inheritance

from the Father, not from this one, but through this one.

இவரும் அவரிடமிருந்து சொத்தை அடைகிறார். எனவே அவரை நினைக்க வேண்டும்.
This one also claims the inheritance from that One, and so you should remember that One.

இவர் இடையில் தரகர் ஆவார்.
This one is just an agent in the middle.

பிள்ளை மற்றும் பெண்ணிற்கு நிச்சயம் நடக்கிறது என்றால் ஒருவரை ஒருவர் நினைப்பார்கள் அல்லவா?
When a couple become engaged, they remember each other.

திருமணம் செய்விப்பவர் இடையில் தரகர் ஆவார்.
The one who arranges the marriage is the agent between them.

இவர் மூலமாக தந்தை ஆத்மாக்களாகிய உங்களின் நிச்சயதார்த்தத்தை தன்னுடன் செய்விக்கிறார். ஆகவே சத்குரு தரகர் ரூபத்தில் கிடைத்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.
The Father has your engagement to Him arranged through this one. This is why there is the praise: I found the Satguru through the agent.

சத்குரு தரகர் கிடையாது. சத்குரு நிராகாரரர் ஆவார்.
The Satguru is not the agent, the Satguru is incorporeal.

குரு பிரம்மா, குரு விஷ்ணு என்கிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் குரு கிடையாது.
They may say: Guru Brahma, Guru Vishnu, but they are not gurus.

ஒரு தந்தை தான் சத்குரு ஆவார். அவரே அனைவருக்கும் சத்கதி அளிக்கிறார்.
Only the one Father is the true Guru (Satguru) who grants salvation to all.

பாபா உங்களுக்குக் கற்பித்திருக்கிறார். ஆகவே தான் நீங்கள் மற்றவர்களுக்கு வழி காண்பிக்கிறீர்கள். பார்த்தாலும் பார்க்காதீர்கள் என அனைவருக்கும் வழிகாட்டுகிறீர்கள். புத்தி சிவபாபாவிடம் இணைந்திருக்கிறது.
The Father teaches you. You then show this path to others and tell them: Even whilst seeing, don’t see! Keep your intellects connected to Shiv Baba.

இந்தக் கண்களால் பார்ப்பவைகள் அனைத்தும் சுடுகாடு ஆகப் போகிறது.
Everything that you see with those eyes is to turn into a graveyard.

ஒரு தந்தையை நினைக்க வேண்டும். இவரையும் நினைக்கக் கூடாது.
Remember the one Father, not this one.

இவரிடமிருந்து சொத்து கிடைக்காது என புத்தி கூறுகிறது.
The intellect says: I cannot receive the inheritance from this one.

தந்தையிடமிருந்து தான் சொத்து கிடைக்க வேண்டும்.
The inheritance will be received from the Father.

தந்தையிடம் தான் செல்ல வேண்டும்.
You have to go to the Father.

மாணவர்கள் மாணவர்களை நினைப்பார்களா என்ன?
A student wouldn't remember a student.

மாணவர்கள் ஆசிரியரைத்தான் நினைப்பார்கள்.
A student would surely remember the teacher.

பள்ளிக்கூடத்தில் புத்திசாலியான குழந்தைகள் மற்றவர்களையும் தூக்கி நிறுத்துவதற்கு முயற்சி செய்வார்கள்.
Clever children at school would also try to uplift others.

அவ்வாறு ஒருவரை ஒருவர் உயர்த்துவதற்கு முயற்சி செய்யுங்கள் என பாபாவும் கூறுகிறார். ஆனால் அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் முயற்சி செய்வதில்லை.
The Father says: Try to uplift one another. However, if it isn't in their fortune, they don't even make the effort.

சிறிதிலேயே திருப்தி அடைந்து விடுகிறார்கள்.
They become content with a little.

கண்காட்சியில் நிறைய பேர் வருகிறார்கள். நிறைய பேருக்கு புரிய வைத்தால் முன்னேற்றம் நிறைய ஏற்படும் என புரியவைக்க வேண்டும்.
You should explain to others. Many come to the exhibitions. There can be a great deal of progress by explaining to many others.

அழைப்பிதழ்கள் கொடுத்து வரவைக்கிறார்கள். மிகவும் பெரிய புத்திசாலியான மனிதர்கள் வருகிறார்கள்.
Send out invitations and invite them and many important, sensible people will then come.

அழைப்பிதழ் இல்லாமல் பலவிதமான மக்கள் வரு கிறார்கள்.
Many varieties of people turn up without an invitation.

ஏதாவது இல்லாதது பொல்லாதது உளறுகிறார்கள்.

They continue to say such wrong things.

இராயல் மனிதர்களின் நடவடிக்கை கூட இராயலாக இருக்கிறது. ராயல் மனிதர்கள் இராயல்டியோடு உள்ளே நுழைவார்கள்.
The behaviour of royal people is also royal. Royal people will enter with royalty.

நடத்தை யிலும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.
There is a big difference in their behaviour too.

அவர்களுக்குள்ளோ நடத்தை பேச்சு எதிலும் மேன்மை இருக்காது.
Others have no manners in the way they behave and talk to others.

மேளாவில் அனைத்து விதமானவர்களும் வருகிறார்கள். யாரையும் தடுக்க முடியாது. ஆகவே கண்காட்சிகளில் அழைப்பிதழ்களைக் கொடுத்து அழைக்கும் பொழுது நல்ல நல்ல மனிதர்கள் வருவார்கள்.
All types turn up at the gatherings (melas). No one is refused admittance. Therefore, if you send people an invitation card inviting them to the exhibitions, many good, royal people will come.

பிறகு அவர்கள் சென்று மற்றவர்களுக்கு சொல்வார்கள்.
Then, they will also go and tell others.

சில நேரங்களில் பெண்களுக்கான நிகழ்ச்சிகள் நடத்தும் போது பெண்கள் மட்டும் வந்து பார்ப்பார்கள். ஏனென்றால் பெண்கள் சில இடங்களில் திரைக்குப் பின்னாலேயே இருக்கிறார்கள்.
Sometimes, have a programme just for females so that only females come and see, because, in many places, many females are behind a veil.

எனவே பெண்களுக்காக மட்டும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுங்கள்.
Therefore, have a programme for only females.

ஆண்கள் வரக்கூடாது.
No males should be allowed to come to that.

முதன்முதலில் சிவபாபா நிராகாரரர் என்பதை புரியவைக்க வேண்டும் என உங்களுக்கு பாபா புரிய வைத்துள்ளார்.
Baba has told you: First of all, you have to explain that Shiv Baba is incorporeal.

சிவபாபா மற்றும் பிரஜா பிதா பிரம்மா இருவரும் தந்தையாகி விட்டனர்.
Shiv Baba and Prajapita Brahma are both “Babas”.

இரண்டு தந்தையிடமிருந்தும் சொத்தை அடையும் அளவிற்கு இருவரும் ஒரே நிலையில் இருக்க முடியாது.
The two cannot become one, so you do not receive the inheritance from both Babas.

சொத்து தந்தையுடையது அல்லது தாத்தாவினுடையது கிடைக்கும்.
You would receive an inheritance from a grandfather or a father.

தாத்தாவின் சொத்தில் உரிமை இருக்கிறது.
One has a right to the property of a grandfather.

எவ்வளவுதான் கெட்ட குழந்தையாக இருந்தாலும் தாத்தாவிடமிருந்து சொத்து கிடைக்கும்.
No matter how unworthy a child may be, he would still receive his grandfather's inheritance.

இது இவ்விடத்தின் சட்டம் ஆகும்.
This is the law here.

இவர்களுக்கு பணம் கிடைத்தால் ஒரு வருடத் திற்குள் காலி செய்துவிடுவர் என அறிகிறார்கள். ஆனால் அரசாங்க சட்டம் இவ்வாறு இருப்பதால் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.
It is also understood that when some people receive that money, they would squander it within a year, but government laws are such that it has to be handed over.

அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது.
The Government cannot do anything.

பாபாவிற்கு அனுபவம் இருக்கிறது.
Baba, however, is experienced.

ஒரு இராஜாவின் குழந்தை இருந்தார், ஒரு கோடி ரூபாயை 12 மாதத்தில் அழித்து விட்டான்.
There was a child of a king who squandered 10 million rupees in 12 months.

இவ்வாறும் இருக்கிறார்கள்.
There are some who are like that.

நான் பார்த்திருக்கிறேன் என்று சிவபாபா கூறமாட்டார்.
Shiv Baba would not say that He has seen such cases.

நான் நிறைய பார்த்திருக்கிறேன் என்று இந்த தாதா தான் கூறுவார்.
This one (Brahma) says: I have seen many such examples.

இந்த உலகம் மிகவும் அழுக்காக இருக்கிறது.
This world is very dirty.

இது பழைய உலகம், பழைய வீடு ஆகும்.
This is an old world, an old house.

பழைய வீட்டை இடிக்க வேண்டி இருக்கிறது.
An old house usually has to be demolished.

இந்த இலட்சுமி நாராயணனின் இராஜ்யத்தில் அவர்களின் வீடு எவ்வளவு நன்றாக இருக்கிறது பாருங்கள்!
Look how first class the royal palaces of Lakshmi and Narayan are.

நீங்கள் நரனிலிருந்து நாராயணன் ஆகிறீர்கள் என்று இப்போது பாபா மூலம் புரிந்து கொள்கிறீர்கள்.
You are now being given understanding by the Father and are becoming Narayan from an ordinary human. This is the story of the true Narayan.

இதையும் குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிந்து கொள்கிறீர்கள்.
Only you children understand this.

உங்களிலும் முழுமையாக மலர் ஆகவில்லை. இதற்கு இராயல்டி மிகவும் தேவை.
Amongst you too, some haven't become complete flowers yet. You need to have very good royalty in this.

நீங்கள் ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்கள்.
You continue to make progress day by day.

மலர்களாக மாறிக் கொண்டிருக்கிறீர்கள்.
You continue to become flowers.

குழந்தைகளாகிய நீங்கள் அன்போடு பாப்தாதா எனக் கூறுகிறீர்கள்.
You children say with love: "BapDada".

இது உங்களுடைய புதிய மொழியாகும். இது மனிதர்களுக்குப் புரியாது.
This language of yours is new and it cannot be understood by other human beings.

பாபா எங்கே சென்றாலும், குழந்தைகள் பாப்தாதா நமஸ்காரம் என கூறுவார்கள். ஆன்மீக உலகியல் குழந்தைகளுக்கு நமஸ்காரம் என பாபா தெரிவிப்பார்.
For instance, when Baba goes somewhere and children say, "BapDada, namaste", Baba responds, "Namaste to you spiritual, physical children.

இவ்வாறு சொல்ல வேண்டும் அல்லவா.
" He would have to respond in that way.

யாராவது கேட்டால் இது புதியதாக இருக் கிறது எனக் கூறுவார்கள். பாப்தாதா ஒன்றாக எப்படி கூறமுடியும்.
If others were to hear this, they would say that this is something new. How can “BapDada” be said to be one?

பாபா மற்றும் தாதா இருவரும் ஒன்றாக இருக்க முடியுமா?
Can both Bap and Dada ever be one?

இருவரின் பெயரும் தனித்தனி.
The name of each is also different.

சிவபாபா, பிரம்மா தாதா, நீங்கள் இவர்கள் இருவரின் குழந்தைகள்.
You are the children of both Shiv Baba and Brahma Dada.

சிவபாபா இவருக்குள் இருக்கிறார் என நீங்கள் அறிகிறீர்கள். நாம் பாப்தாதாவின் குழந்தைகள்.
You know that Shiv Baba is sitting in this one, that you are BapDada’s children.

இதுவும் புத்தியில் நினைவிருந்தால் குஷியின் அளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். மேலும் டிராமாவில் உறுதியாக இருக்க வேண்டும்.
If your intellects remember even this much, your mercury of happiness will remain high. You also have to remain stable in regard to the drama.

யாராவது உடலை விட்டு விட்டால் இன்னொரு நடிப்பை நடிப்பார்கள் எனப் புரிந்து கொள்ளுங்கள்.
For instance, when someone leaves his body, he will go and play another part.

ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அழிவற்ற நடிப்பு கிடைத்திருக்கிறது. இதில் கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை.
Each and every soul receives an eternal part. There is no need to have any thoughts about this.

அவர்கள் இன்னொரு பார்ட்டை நடிக்க வேண்டும்.
He had to go and play another part.

மீண்டும் அழைக்க முடியாது.
He cannot be called back.

டிராமா அல்லவா?
That is in drama.

இதில் அழுவதற்கு எதுவும் இல்லை.
There is nothing to cry about in this.

இது போன்ற நிலை உடையவர்கள் பற்றற்ற இராஜா ஆகிறார்கள்.
Only those with such a stage will go and become kings without attachment (King Nirmohi).

சத்யுகத்தில் அனைவரும் பற்றற்றவர்களாக இருக்கிறார்கள்.
In the golden age, everyone is without attachment.

இங்கே யாராவது இறந்துவிட்டால் எவ்வளவு அழுகிறார்கள்! பாபாவை அடைந்து விட்டால் பிறகு அழ வேண்டியதில்லை.
Here, when someone dies, they cry so much. There is absolutely no need to cry when you have found the Father.

பாபா எவ்வளவு நல்ல வழி காட்டுகிறார்.
Baba shows you such a good path.

கன்யாக்களுக்கு மிகவும் நல்லது.
For the kumaris, it is very good.

தந்தை வீணாக பணத்தை செலவு செய்கிறார். மேலும் நீங்கள் சென்று நரகத்தில் விழுகிறீர்கள்.
Your father would spend money wastefully and you would fall into hell.

இதை விட நாங்கள் இந்த பணத்தினால் ஆன்மீக யுனிவர்சிட்டி மற்றும் ஆஸ்பிட்டல் திறப்போம், நிறைய பேருக்கு நன்மை செய்தால் உங்களுக்கும் புண்ணியம், எங்களுக்கும் புண்ணியம் ஆகி விடும் எனக் கூறுங்கள்.
Instead of this, tell him: “I will open a spiritual university-cum-hospital with that money. If I bring benefit to many, that will be charity done by you and also by me.

நாம் பாரதத்தை சொர்க்கமாக மாற்றுவதற்காக உடல், மனம், பொருள் அனைத்தையும் செலவு செய்வோம் என குழந்தைகள் தாங்களே உற்சாகத்தில் இருப்பீர்கள்.
” Children, you, yourselves, should remain enthusiastic and spend everything - body, mind and wealth – in making Bharat into heaven.

இவ்வளவு போதை இருக்க வேண்டும்.
There should be so much intoxication.

கொடுக்க வேண்டும் என்றால் கொடுங்கள், வேண்டாம் என்றால் கொடுக்க வேண்டாம்.
If you want to give it, then give it. If you don’t want to, then don’t.

நீங்கள் உங்களுக்கும் நன்மை மற்றும் பலருக்கும் நன்மை செய்ய விரும்பவில்லையா?

Do you not want to bring benefit to yourselves and to many others?

இவ்வளவு போதை இருக்க வேண்டும்.
There should be this much intoxication.

முக்கியமாக குமாரிகள் எழுந்து நிற்க வேண்டும்.
Kumaris should especially be very alert.

நல்லது.
Achcha.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.
To you sweetest, beloved, long-lost and now-found children, love, remembrance and good morning from the Mother, the Father and BapDada.

ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.
The spiritual Father says namaste to you spiritual children.

தாரணைக்கான முக்கிய சாரம்:
Essence for dharna:

1. தன்னுடைய நடத்தை, நடிவடிக்கைகள் மிகவும் இராயலாக இருக்க வேண்டும்.
Let your activity and behaviour be very royal.

மிகவும் மேன்மையாக பேச வேண்டும்.
Speak with good manners.

பணிவு என்ற குணத்தை தாரணை செய்ய வேண்டும்.
Imbibe the virtue of humility.

2. இந்த கண்களுக்கு என்னென்ன தெரிகிறதோ அது அனைத்தும் சுடுகாடு ஆகப்போகிறது. ஆகவே இதை பார்த்தாலும் பார்க்காமல் இருங்கள்.
Everything you see with those eyes is to turn into a graveyard. Therefore, do not see whilst seeing.

ஒரு சிவபாபாவைத்தான் நினைக்க வேண்டும். எந்த தேகதாரியையும் நினைக்க கூடாது.
Remember Shiv Baba alone and no bodily being.

வரதானம்:மாஸ்டர் ஞானக்கடலாகி பொம்மை விளையாட்டை முடித்துவிட்டு

நினைவு மற்றும் சக்தி சொரூபமாகுக
Blessing:May you be an embodiment of awareness and so an embodiment of power by finishing those games of dolls and becoming a master ocean of this knowledge.

பக்தி மார்க்கத்தில் மூர்த்தி செய்து பூஜை செய்கின்றனர். பிறகு அதனை நீரில் மூழ்கச் செய்கின்றனர். அதையே நீங்கள் பொம்மை பூஜை என்று சொல்கின்றீர்கள்.
On the path of devotion, they make idols, worship them and then drown them, and you call that the worship of dolls.

அவ்வாறே உங்களுக்கு முன்னால் ஏதேனும் உயிரற்ற, சாரமற்ற பொறாமை, ஆவேசம், அனுமானம் வரும் போது அவற்றை நீங்கள விஸ்தாரமாக்கி அனுபவம் செய்வதும், செய்ய வைப்பதும் இதுவே சத்யம் என நினைப்பதுமே கூட அவற்றுக்கு உயிர்கொடுப்பதாகும்.
In the same way, lifeless situations of no essence, such as jealousy, imagination, force etc. come in front of you. You expand them and you then yourself, experience them to be the truth and you make others too experience them to be the truth.

பிறகு அதனை ஞானக்கடல் பாபாவின் நினைவால் முடிந்தவற்றிற்கு முற்றுப் புள்ளி வைத்து சுய முன்னேற்றம் எனனும் அலைகளில் மூழ்க்ச் செய்கிறீர்கள்.
So, that is like putting life into those situations. Therefore, by having remembrance of the Father, the Ocean of Knowledge, you can let the past be the past and drown it in the waves of self-progress.

ஆனால் இதிலும் நேரம் விரயமாகின்றது அல்லவா! எனவே முன்னதாகவே மாஸ்டர் ஞானக்கடலாகி நினைவால் சக்தி பவ எனும் வரதானத்தால் இந்த பொம்ம்மை விளையாட்டை முடித்து விடுங்கள்.
However, time is wasted even in that. Therefore, become a master ocean of this knowledge beforehand and finish those games of dolls with the blessings of awareness and power.

சுலோகன்:யார் தக்க சமயத்தில் ஒத்துழைப்பு தருவார்களோ அவர்களுக்கு ஒன்றுக்கு பன்மடங்கு பலன் கிடைத்து விடுகின்றது.
Slogan:Those who are co-operative at a time of need receive multimillion-fold fruit of one.

அவ்யக்த சமிக்ஞை : ஏகாந்த பிரியராகுங்கள் ஒற்றுமை மற்றும் ஒருமுகத்தன்மையை கொண்டு வாருங்கள்
Have love for solitude and imbibe unity and concentration.

அரசியல் தலைவர்கள், தர்மத் தலைவர்கள் அனைவருக்கும் தூய்மை மற்றும் ஒற்றுமையினை அனுபவம் செய்ய வையுங்கள்.
Give all the religious and political leaders an experience of purity and unity.

இந்த குறைபாட்டினாலேயே தான் இரு சக்திகளும் பலவீனமாக உள்ளது.
Because they lack this, both of those authorities are weak.

தர்மத்தின் சக்தியின்மையை உணர்த்தும் முறை தூய்மையினை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். அரசியல் தலைவர்களிடம் ஒற்றுமையை ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

The special way to make the authority of religion free from this is to prove purity and to prove unity in front of the authority of politics.